# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 141/2013

Prosecution Witness 5

| | | | |
|---|---|---|---|
| Name | : சண்முகம் | Caste | : |
| Father's Name/ Husband's Name | : த/பெ.வெங்கடாச்சலம் | Calling | : |
| Village | : கோயமுத்தூர், மசக்காளிபாளையம் | Religion | : |
| Taluk | : | Age | : 67 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd day of September 2025.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்)

<u>முதல் விசாரணை</u> :

1. நான் தற்போது கோயமுத்தூர், மசக்காளிபாளையத்தில் குடியிருக்கிறேன். நான் கோவை, நீலகிரி, ஈரோடு, திருப்பூர் மாவட்ட திரைப்பட விநியோகர்கள் சங்கதில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் சங்க அங்கத்தினர்கள் புதிய படங்களை விநியோக உரிமை பெற்று திரையிட்டு வருகிறார்கள். கோவை, வீடியோ தடுப்புதுறை போலீசார் அவர்கள் கைப்பற்றியுள்ள அப்போதைய புதிய தமிழ் திரைப்படங்கள் மன்னார், மாற்றான், முகமூடி, தாண்டவம், சாட்டை, சாருலதா, சுந்தரபாண்டியன், துப்பாக்கி உள்ளிட்ட படங்களுக்கு வீடியோ உரிமை தரப்பட்டதா என 20.11.2012 அன்று என்னை விசாரித்தார்கள்.

2, மேற்படி படங்களின் தயாரிப்பாளர்கள் சி.டி விற்பனை உரிமையை யாருக்கும் தரவில்லை என தெரிவித்தேன். அதற்கான கடிதம் கொடுத்துள்ளேன். (காவல் ஆய்வாளர் அவர்களுக்கு நான் கொடுத்த 20.11.2012 தேதியிட்ட கடிதம் **அசாஆ 8** ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது), ( எதிரி தரப்பு வழக்கறிஞர் மேற்படி கடிதம் கொடுப்பதற்கு சாட்சிக்கு அதிகாரம் இல்லை என்பதால் ஆட்சேபனை செய்தார். ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

3. எங்கள் சங்கத்தில் எத்தனைபேர் அங்க உறுப்பினர்களாக உள்ளார்கள் என்றால் மொத்தம் 128 பேர் உள்ளனர். எங்கள் சங்கதில் தலைவர், செயலாளர் ஆகிய பதவி உள்ளது. வழக்குகளில் சங்கம் சார்பாக சாட்சியமளிப்பதற்கு சங்க அலுவலர்களால் எனக்கு முறையான அங்கீகாரம் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல கொடுத்துள்ளார்கள். எந்த தேதியில் சங்கத்தின் அலுவலர்கள் எனக்கு அதிகாரம் கொடுத்தார்கள் என்றால் 10 வருடங்களுக்கு முன்பாக எழுத்துபூர்வமாக கொடுத்தார்கள். எனக்கு கொடுக்கப்பட்ட அதிகாரம் சம்மந்தப்பட்ட ஆவணத்தை போலிசாரிடம் காண்பிக்கப்பட்டதா என்றால் நான் காண்பித்தேன்

4. போலீசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்த சங்கதியை சங்க அலுவலர்களிடம் நான் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னிடம் எழுத்து பூர்வமான அங்கீகார ஆவணத்தை வாங்கவில்லை என்றால் சரிதான். நான் சங்கத்தின் மேலாளர் இல்லை என்றும் சங்கத்தின சார்பாக சாட்சியமளிக்க எனக்கு அதிகாரம் இல்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.